07.08.2025

CC No. 113/2023

**ம.சா.1 சண்முகம் த/பெ.பஞ்சநாதன்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) எதிரிக்கு நான் வழக்கறிஞர் மூலம் கூடுதல் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னர் அசல் மனுவில் திருத்தம் செய்யவேண்டி தனி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் புகார்மனு, வழக்கறிஞர் அறிவிப்பு, முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் நான் சொன்ன தேதியில் எதிரி வழக்கு தொகையை பெறவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், எதிரி வழக்கு காசோலையை பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. காசோலையில் உள்ள தேதி, மாதம், வருடம், தொகை எண்ணாலும், எழுத்தாலும் பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியால் காசோலை பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் ரூ. 4 லட்சம் கடன்பெறாத நிலையில் அசல் மற்றும் வட்டி தொகையையும் சேர்த்து ரூ. 4 லட்சத்து 25 ஆயிரம் திரும்ப செலுத்துவதற்கு வழக்கின் காசோலை எதிரியால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி காசோலை சட்டப்படியான கடனை திரும்ப செலுத்தும்போது எதிரியால் என்னிடம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

2) பாலையூரைச் சேர்ந்த ஆறுமுகம் மனைவி மஞ்சுளா என்பவரை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 4, 5 வருடங்களாக தெரியும். மேற்படி மஞ்சுளாவிற்கும் எனக்கு கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரிதான். மஞ்சுளா அ.தி.மு.க கட்சியை சார்ந்தவர் என்றாலும், வார்டு கவுன்சிலராக இருந்தார் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. மஞ்சுளா டிகிரி படித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மஞ்சுளா மகளிர் சுய உதவி குழுவிற்கு தலைவியாக சுமார் 10 வருடங்களுக்கு மேலாக இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் உடன் பிறந்த அக்கா உமையாள் மகள் மஞ்சுளா என்றால் அது பற்றி தெரியாது. எதிரி மஞ்சுளா நடத்தி வந்த மகளிர் சுய உதவி குழுவில் உறுப்பினர் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி குழுவில் வங்கி கணக்கு திறக்க எதிரியின் ஆதார் அட்டை, போட்டோ மஞ்சுளா மூலம் கொடுக்கப்பட்டு கண்டனூர் ICICI வங்கியில் கணக்கு திறக்கப்பட்டு எதிரிக்கு வழங்கப்பட்ட காசோலை புத்தகம் குழு

பரிவர்த்தனைக்காக மஞசுளாவிடம் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல.

3) மஞ்சுளா எதிரி பெயரில் உள்ள காசோலையை தவறாக பயன்படுத்தி என்னிடம் வாங்கிய கடனிற்கு காசோலை எண் 027283 ஐ பயன்படுத்தியுள்ள விபரம் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னர் தெரியவந்து அதன் பேரில் உரிய பதில் அறிவிப்பு வழக்கறிஞர் மூலம் கொடுத்தார் என்றால் வழக்கறிஞருக்கு அனுப்பியும் எனக்கும் அனுப்பப்பட்டு பெற்றுக்கொண்டேன். இதே நீதிமன்றத்தில் சி.சி. 154/2022 என்ற வழக்கை கரியப்பட்டியை சார்ந்த ராஜேஸ்வர் என்பர் பெயரில் ரூ. 3 லட்சத்து 25 ஆயிரம் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எதிரி ராஜேஸ்வரி எதிர் வழக்காடி வருகிறார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி மஞ்சுளா அவரது மகன் அசோக்குமார். அவரின் தோழி பாக்கியலெட்சுமி, அவரது கணவர் ராமு, நெடுமுடி கணேஷ், ஐங்கரன், தேவகோட்டை பிரபுராஜ்ஆகியோர்கள் கண்டனூர் தட்சினாமூர்த்தி வீட்டில் 45 பவுன் நகை கொள்ளையடிக்கப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட அது சம்பந்தமாக குற்ற எண் 156/2022 என்ற வழக்கில் கைதாகி நீதிமன்றத்தில் ரிமான்ட் செய்து ஜாமினில் வெளிவந்த விபரம் தெரியாது.

4) மஞ்சுளா வெளிநபர்களிடம் அதிக கடன் பெற்றதாலும், சீட்டு நடத்தியதாலும், பணத்தை திருப்பி கொடுக்கமுடியாத நிலையில் மன உளைச்சல் ஏற்பட்டு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டவிபரம் தெரியுமா என்றால் அவர் இறந்த விபரம் மட்டும் தெரியும். மஞ்சுளா இறந்த விபரம் குறித்து அவர் கணவர் காவல் நிலையத்தில் புகார் அளித்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்கு தெரிந்தும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் மஞ்சுளா இறந்த பின்னர் என்னை அவர் போனில் தொடர்பு கொண்டதற்கான விபரங்கள் மஞ்சுளாவின் போனில் இருந்ததால் என்னை சாக்கோட்டை போலீசார் காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். எதிரி நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் பணம் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி எவ்வித மோசடியும் செய்யவில்லை. இறந்துபோன மஞ்சுளாவசம் இருந்த காசோலைகளை இவ்வழக்கு காசோலையாக எதிரி கொடுத்தாக சொல்கிறேன் என்றாலும், இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**5) என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பில் முகவரி காலத்தில் எதிரியின் பெயர் மல்லிகா க/பெ.ஆறுமுகம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.அந்த அஞ்சலக கவர்**

**எ.சா.ஆ.1 ஆகு குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் இருந்த எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பிலும், எதிரியின் கணவர் பெயர் ஆறுமுகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற அறிவிப்பின் அஞ்சலக உறை எ.சா.ஆ.2 ஆகும். பின்பு 2 வது முறையாக நீதிமன்றத்தில் இருந்து எதிரிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பில்**நான் தாக்கல் **எதிரியின் கணவர் பெயர் ராமன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எ.சா.ஆ. 3 ஆகும்.** நான் தாக்கல் செய்துள்ள புகார்மனு, மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எதிரியின் கணவர் பெயர் ஆறுமுகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனவே எதிரியை பற்றியோ, எதிரியின் கணவர் பற்றியோ தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனவே எதிரி என்னிடம் இருந்து கடன் வாங்கினார் என்று சொல்லக்கூடிய குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

6) வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் எதிரியின் கணவர் பெயர் ராமன் என தெரியவந்தது என்பதன் அடிப்படையில் எதிரிக்கு இரண்டாவது முறையாக நீதிமன்றத்தில் இருந்த அவரது கணவர் பெயர் ராமன் என குறிப்பிடப்பட்டு சம்மன் சார்பு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே எதிரி எனக்கு எந்த வித கடனையும் திரும்ப செலுத்த கடமை பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.07 18:43:46 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)